Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 011 | சனிக்கிழமை Saturday | 11.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சென்னை மெட்ரோ ரயிலில் பயணிகளிடம் வாக்கு சேகரித்த முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை:

தமிழக முதலமைச்சர் மு.கஸ்டாலின்சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.2026 சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23–ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில்,அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அனல் பறக்கும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பரப்புரை மேற்கொண்டு வருகிறார்.

மேலும்அவர்,பிரச்சாரத்திற்கு செல்லும் மாவட்டங்களில் காலை நேரங்களில், நடைபயிற்சி மேற்கொண்டு சாலைகளில் பொதுமக்களுடன் கலந்துரையாடியும், தேநீர் கடைகளில் மக்களுடன் மக்களாக தேநீர் பருகியும் வாக்கு சேகரித்தும் வருகிறார். அந்த வகையில் இன்றைய தினம் சென்னை மெட்ரோ ரயிலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயணம் மேற்கொண்டு மெட்ரோ ரயிலில் பயணம் செய்த பொதுமக்களுடன் கலந்துரையாடி வாக்கு சேகரித்தார்.

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து, முதல்வரின் இல்லம் அமைந்துள்ள தேனாம்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் வரை முதலமைச்சர் மெட்ரோ ரயில் பயணித்து வாக்கு சேகரித்தார். பொதுவாக காலை நேரங்களில் மெட்ரோ ரயிலில் வேலைக்கு செல்லும் பொதுமக்கள் அதிகம் பேர் பயணிப்பர் ஆகையால் முதல்வர் பயணித்தபோது அதிகபடியான பயணிகள் மெட்ரோ ரயிலில் உடன் பயணித்தனர். தன்னுடன் பயணித்த பயணிகளிடம் தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

குறிப்பாக தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் உங்களுக்கு திருப்திகரமாக உள்ளதா? மெட்ரோ ரயில் சேவை பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறதா? என்ற பல்வேறு கேள்விகளை எழுப்பி பொதுமக்களிடம் கருத்துகளை அவர் கேட்டறிந்தார். மேலும் திமுக அறிவித்துள்ள தேர்தல் அறிக்கைகள் குறித்து மெட்ரோவில் பயணித்த கல்லூரி மாணவ, மாணவிகளுடன் முதலமைச்சர் கலந்துரையாடினார். மெட்ரோவில் பயணித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலினை கண்ட பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவருடன் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை தேர்தல் பரப்புரையை நிறைவு செய்துள்ள முதல்வர் ஸ்டாலின் சென்னையில் முழு வீச்சில் விரைவில் பரப்புரையை தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இன்று மாலை தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் அவர் பரப்புரை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

# பொது சிவில் சட்டம், மகளிருக்கு ரூ.3,000 மேற்கு வங்க பாஜக தேர்தல் அறிக்கை




கொல்கத்தா: பாஜக ஆட்சி அமைந்ததும் ஆறு மாத காலத்தில் மேற்கு வங்கத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என அம்மாநில

தேர்தலை முன்னிட்டு பாஜக வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக வரும்23மற்றும்29ஆகிய தேதிகளில் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலைமுன்னிட்டு ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி,பாஜக,இடது முன்னணி கூட்டணி மற்றும் காங்கிரஸ் கட்சி தனித்தனியாக போட்டியிடுகின்றன. இந்தச் சூழலில் மேற்கு வங்க மாநில பாஜக தேர்தலை அறிக்கையை த்திய அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் இவை...

> 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியின் ஊழலையும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவையும் அம்பலப்படுத்தும் வகையில் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

>பாஜகஆட்சிக்குவந்த ஆறு மாத காலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும்.

>பெண்களுக்குமாதம் ரூ.3,000 வழங்கப்படும்.

> நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய ஊடுருவல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

> கால்நடை கடத்தலைத் தடுக்க கடுமையான சட்டம் இயற்றப்படும்.>மேற்கு வங்கத்தில் பாஜகஅரசின் அனைத்து திட்டங்களும் அமல்படுத்தப்படும். இதில் ஆயுஷ்மான் பாரத் திட்டமும் அடங்கும்.

> ஆட்சிக்கு வந்த 45 நாட்களில் 7–வது ஊதியக்குழு பரிந்துரையின்படி அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி (டிஏ) வழங்கப்படும். 7வது ஊதியக் குழுஅமல்படுத்தப்படும்.

> ஐந்து ஆண்டுகளில் ஒருகோடி புதியவேலைவாய்ப்புகள்,சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். வேலையற்ற இளைஞர்களுக்கு ரூ.3,000நிதி உதவி வழங்கப்படும்.

> அரசியல் வன்முறைகள் குறித்து ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைத்து விசாரிக்கப்படும். இதில் கட்சிவித்தியாசம்இருக்காது. >சட்டம் – ஒழுங்கு உறுதி செய்யப்படும். பெண்களுக்கான பிரத்யேக காவல்படை உருவாக்கப்படும்.

> 33% இடஒதுக்கீடு வழங்குவதன் மூலம் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் உறுதி செய்யப்படும்.

> மத வழிபாடுகளின் சுதந்திரத்தை உறுதி செய்யும் சட்டம் இயற்றப்படும்

# நேரம் கடந்ததால் காரைக்குடியில் பரப்புரையை தவிர்த்த விஜய்; தவெக தொண்டர்கள் ஏமாற்றம்




சிவகங்கை: பரப்புரைக்கான அனுமதி நேரம் முடிவடைந்ததால் காரைக்குடி தேர்தல் கூட்டத்தில் எதுவும் பேசாமல் தவெக தலைவர் விஜய் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தமிழகம் முழுவதும் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார். சென்னை, திருச்சி, நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் இதுவரை பரப்புரையை நிறைவு செய்த அவர், இன்று சிவகங்கை மாவட்டம் கரைக்குடி தொகுதியில் பரப்புரை மேற்கொள்ள இருந்தார். இதற்காக காலை 9 மணி அளவில் தனி விமானத்தில் மதுரை வந்த அவர், அங்கிருந்து சாலை மார்க்கமாக காரைக்குடி சென்றார். மதுரையில் இருந்து காரைக்குடி சென்ற விஜய்க்கு, அக்கட்சி தொண்டர்கள் சாலையின் இருபுறம் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மதுரையில் இருந்து 11 மணி அளவில் வாகனத்தில் புறப்பட்ட விஜய், சுமார் 2 மணி அளவில் காரைக்குடியை சென்றடைந்தார். இடையில் பரப்புரை வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், சிறிது தூரம் சைக்கிளில் பயணித்தார். ஆனால், ஏராளமான தொண்டர்கள் சாலையில் இருபுறமும் இருந்ததால், கூட்ட நெரிசல் ஏற்பட்டு சைக்கிளில் இருந்து தடுமாறி விழுந்தார். இதனால் மீண்டும் பரப்புரை வாகனத்திற்கு சென்றார். சாலை முழுவதும் தொண்டர்கள் சூழ்ந்து கொண்டதால், விஜய்யின் வாகனம் பரப்புரை கூட்டத்திற்கு செல்வதில் சிரமம் ஏற்பட்டது. குறிப்பாக காரை க்குடியில் விஜய் பரப்புரை வாகனம் நுழைந்தும்,பெரிய அளவில் கட்சியினர் திரண்டதால் வாகனம் செல்வதில் சிக்கல் நிலவியது. போலீ சாரின் கடும் முயற்சிக்கு பின்னர், வாகனத்திற்கு வழி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. இருந்தும் சில நிமிட இடைவெளியில் விஜய்யின் வாகனத்தை தவெகவினர் சூழ்ந்து கொண்டதால், விஜய்யின் பரப்புரை வாகனம் மீண்டும் கூட்ட நெரிசலில் சிக்கியது. மதுரையில் இருந்து அதிகபட்சம் 90 நிமிடங்களில் விஜய் காரைக்குடியை வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சுமார் 4 மணி நேரம் கடந்தே விஜய்யால் காரைக்குடி வந்தடைய முடிந்தது. விஜய் பரப்புரை செய்ய பிற்பகல் 12 மணி முதல் 2.30 மணி வரையே தேர்தல் ஆணைய அதிகாரிகள் அனுமதி வழங்கிய இருந்த நிலையில், விஜய் வாகனம் பரப்புரை செய்யும் இடத்திற்கு மதியம் 2.45 மணிக்கே வந்தடைந்தது. இதனால், விஜய் பரப்புரை செய்யாமல் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். காரைக்குடியில் விஜய் பரப்புரையை கேட்க ஆயிரக்கணக்கான தொண்டர்கள் காத்திருந்த நிலையில், விஜய் பரப்புரை செய்யாமல் புறப்பட்டு சென்றதால் தொண்டர்கள் சோகமடைந்தனர்

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மீண்டும் கிடுகிடுவென உயர்ந்த தங்கம் விலை



சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (ஏப்.10) ரூ.1,000 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,000–க்கு விற்பனைசெய்யப்படுகிறது. மேற்காசிய போர் காரணமாக தினசரி தங்கம் விலையில் பெரும் மாற்றம் இருந்து வருகிறது. போருக்கு முன்பு வரலாறு காணாத வகையில் உச்ச விலையை தொட்ட தங்கம், போர் தொடங்கிய பின்னர் குறையத் தொடங்கியது. போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் தங்கம் விலை குறைந்து வந்தது.

அதாவது, கச்சா எண்ணெய் விலை உயர்வால் முதலீட்டாளர்களின் கவனம் அதன் மீது விழுந்தது.இதனால்தங்கத்தில் இருந்த முதலீடுகள் பெரும்பாலும், கச்சா எண்ணெய் பங்குகளுக்கு திரும்பின. இதுவே தங்கம் விலை குறைவதற்கு காரணமாக அமைந்தது.

தற்போது ஈரான் போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்து மீண்டும் தங்கம் விலை உயர தொடங்கியது. இந்த விலை உயர்வு தொடரும் என பொருளாதார நிபுணர்களும் கணித்த நிலையில், நேற்று மளமளவென குறைந்தது. ஆனால் இன்று தங்கம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.


தங்கம் விலை

நேற்று (ஏப்ரல் 9) ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,600 குறைந்து, ஒரு சவரன் 1,12,000–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், கிராமுக்கு ரூ.200 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,000–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இன்று (ஏப்.10) தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,000 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,000–க்கும், கிராமுக்கு ரூ.125 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,125–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை

அதேபோல் வெள்ளி விலையும் இன்று அதிகரித்துள்ளது. அதன்படி, நேற்று (ஏப்.9) ஒரு கிராம் ரூ.260–க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,60,000–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இன்று(ஏப்.10)கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,65,000–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஊத்தங்கரை அடுத்த நாச்ச கவுண்டனூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்க்கு முன் சிறப்பு யாகம்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த நாச்ச கவுண்டன் ஊரில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா 12.4/2026 அன்று நடைபெற உள்ளது.

இந்தக் கோயில் சுமார் 200 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தது, கோயிலில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் பொதுமக்களின் பக்தர்களின் வேண்டுதலை உடனே செய்து தரும் சக்தி வாய்ந்தது,அம்மன் திருவீதி உலாவரும்பொழுது பக்தர்கள் தம் குறைகளைவேண்டும்வேண்டுதலை அம்மனிடம் கேட்டால் அம்மன் உடனடியாக நடக்கும் ,நடக்காது என்று தெரிவித்து உடன் தெரிவித்து விடும். வேண்டுதல் வைப்பவர் இரண்டு திக்கில் உள்ள பொருள்களை நினைவில் வைத்து, ஒரு புறத்தில் நடைபெறும் மற்றொரு புறத்தில் நடைபெறாது என்று நினைத்துக்கொண்டால், அம்மன் கோரிக்கை நடக்கும் என்றால் பக்தர் நினைத்தது சென்று நிற்குமாம்.. கோரிக்கை நடக்காது என்றால் நடக்காது என்று நினைத்த திக்கில் நிற்குமாம் . இது போன்ற சக்தி வாய்ந்த மாரியம்மன் கோயில் என்கின்றனர் இப்பகுதி மக்கள். கோயில் வளாகத்தில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், ஸ்ரீ அக்னி மாரியம்மன், ஸ்ரீ மகா கணபதி, ஸ்ரீ வேடியப்பன் சாமி, ஸ்ரீ வாராஹி, ஸ்ரீ வைஷ்ணவி,ஸ்ரீ துர்கை பரிவார கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. 3.4.2026 அன்று பந்தக்கால் பூஜையுடன் துவங்கி, 9.4. 2026 அன்று மங்கள வாத்தியத்துடன், கோ பூஜை விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி பூஜைகள் நடைபெற உள்ளது. 10.4. 2026 யாக சாலை பிரவேசம், விக்னேஸ்வர பூஜை,நவகிரக ஓமம், மகாலட்சுமி ஹோமம், வாஸ்துசாந்தி , தீபாரதனை நடைபெற உள்ளது. மாலை யாகசாலை பிரவேசம் விக்னேஸ்வர பூஜை, முதல் கால மூல மந்திர மூர்த்தி யாகசாலை பூஜை நடைபெற உள்ளது .11.4.2026 காலை மங்கள வாத்தியத்துடன் விக்னேஸ்வர பூஜை இரண்டாம் கால யாக பூஜை, மாலை மங்கள வாத்தியத்துடன் முளைப்பாரி ஊர்வலம், விக்னேஸ்வர பூஜை, மூன்றாம் கால யாக பூஜை நடைபெற்று கும்பாபிஷேகவிழாசிறப்பாக நடைபெற உள்ளது. கிராம மக்கள் மற்றும் சுற்றுவட்டாரகிராமமக்கள்தர்மபுரிகிருஷ்ணகிரி திருவண்ணாமலை திருப்பத்தூர் மாவட்டங்களைச்சார்ந்தபக்தர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து அம்மன் அருள் பெற அழைக்கிறோம்.12.4.2026 மங்கள வாத்தியத்துடன் விக்னேஸ்வர பூஜை, நான்காம் கால மூல மந்திரம், தீபாராதனை உடன் மகா கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. மகா கும்பாபிஷேக விழா ஜகத்குரு ஸ்ரீ பரம்மஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள் தலைமையில் நடைபெற உள்ளது. அனைத்து பக்தர்களும் குரு அருள் பெற்று கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ளுமாறு விழா குழு தர்மகர்த்தா ஓம்முருகன்,ஊர்கவுண்டர் சதீஷ்குமார், ஊர் நாட்டார் கந்தன், பொருளாளர் விசுவநாதன், அன்பு,கண்ணன் மற்றும் ஊர் பொதுமக்கள், விழாக்குழுவினர் கேட்டுக் கொண்டிருந்தனர். அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேக விழாவை ஓம் ஸ்ரீ கந்தாஸ்ரமம் முத்து சுவாமி சர்மா, புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி பூஜகர் சிவசங்கரன் சர்மா, மங்கல இசை சென்னை கந்தா சர்மா ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் சண்முகம் குழுவினர் மற்றும் ஸ்தபதி கிருபாகரன் ஆகியோர் கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடத்த உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ. ராமஜெயம் சொட்டையன் தோப்பு பகுதியில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது, ஒன்றிய துணைச் செயலாளர் கணேசன் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்டத் துணைச் செயலாளரும் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய மாப்பிள்ளையூரணி தேர்தல் பொறுப்பாளர் ஜெயக்குமார் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார்.

# லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தும் வரை அமெரிக்கா உடன் அமைதிப் பேச்சு இல்லை: ஈரான் உறுதி



அமெரிக்கா – ஈரான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நாளை (ஏப்.11) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை சுட்டிக்காட்டியுள்ள ஈரான், அந்த தாக்குதல் நிறுத்தப்பட்டால் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈரான் பங்கேற்கும் என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், 'அமைதிப் பேச்சுவார்த்தை நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள ஈரான் தயாராக உள்ளது.

ஈரான் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களுக்கு (ஹிஸ்புல்லா) சாதகமான முடிவுகள் இல்லாமல் முடிவடையும் ஒரு போர் நிறுத்தத்தின் விளைவுகளில் இருந்து அமெரிக்காவால் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது.

ஈரானும் எதிர்ப்பு சக்திகளும் விரும்பும் ஓர் உடன்பாட்டுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒப்புக்கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காணும். இல்லையென்றால் அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று ஈரான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பி டப்பட்டுள்ளது.

முன்னதாக, ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "லெபனானுக்குள் இஸ்ரேல் மேற்கொண்ட ஊடுருவல், ஆரம்ப கால போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அப்பட்டமான மீறலாகும். இது, சாத்தியமான உடன்படிக்கைகளுக்கான அர்ப்பணிப்பின்மையின் அபாயகரமான அறிகுறியாகும்.



மதுரை மத்திய தொகுதியின் அதிமுக கூட்டணி கட்சி வேட்பாளரும் புதிய நீதி கட்சி சார்பாக போட்டியிடக் கூடிய நடிகர் சுந்தர் சி அவர்கள் எஸ் எஸ் காலனியில் உள்ள பிராமணர் சங்கத்தில் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் செல்லூர் ராஜு உடன் இருந்தார்

# தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் திரேஷ்புரம் பகுதியில் வீதி வீதியாக பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைஅமைச்சரும் தூத்துக்குடி சட்டமன்றதொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளருமான கீதாஜீவன் 7, 8, ஆகிய வார்டு பகுதியில் பிரச்சாரத்திற்கு மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி , மண்டலத்தலைவர் நிர்ம ல்ராஜ், வட்டச்செயலாளர்கள் தினகரன், ரவிசந்திரன், கவுன்சிலர்கள் பவாணி, ஆறுமுகம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரி லிங்கம்,செயலாளர் முருகையா, ஆலோசகர் எஸ். ஆர்.சந்தனராஜ் மகாராஜா, அகமது மாற்று முத்தரையர் கனவா மீன்பிடி நல சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செய லாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், புஷ்பராஜ், மார்ச ல், பெருமாள் கோவில் அறங்காவலர் தலைவர் செந்தில்குமார், லூர்தம்மாள்புரம் ஊர் நலக்கமிட்டி தலைவர் ஜான்சன்,மற்றும்மணிஅல்பட் உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி பண்பொழி திருமலை கோவில் பகுதிகளில்முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் டாக்டர் செல்லத்துரை தலைமையில் முன்னாள் தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவி தமிழ்ச்செல்வி முருகன் ஆகியோர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் திமு ராசேந்திரனுடன்உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வாக்காளர்களை கேட்டுக் கொண்டார்

# இந்தியாவில் கட்டுப்பாடுகள் கொண்ட கோயில்கள் சபரிமலை வழக்கில் பட்டியலிட்ட மத்திய அரசு

புதுடெல்லி: இந்தியாவில் புஷ்கரின் பிரம்மா, அசாமின் காமாக்யா ஆலயம் உள்ளிட்ட கோயில்களின் மரபுகளை மத்திய அரசு பட்டியலிட்டது. இதை உச்ச நீதிமன்றத்தில்



நடைபெறும் சபரிமலையில் பெண்கள் நுழையும் வழக்கில் நீதிபதிகள் அமர்வின் முன் தெரிவித்தது.

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமைநீதிபதிசூர்யகாந்த்,நீதிபதிபி.வி.நாகரத்தினா அடங்கிய 9 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

பெண்கள்மீதானதடையைமத்தியஅரசும்ஆதரித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, அரசு நிலைப்பாட்டை ஆதரித்து வழக்காடினார். இதில், நாட்டின் பிற ஆலயங்களில் பின்பற்றப்படும் மரபுகளைச் சுட்டிக்காட்டினார்.

இந்த வகையான நடைமுறைகள் பாலினப் பாகுபாட்டின் ஒரு பகுதியல்ல என்றும்,மாறாக அவை மதச்சடங்குகள், நம்பிக்கை மற்றும் விஸ்வாசம் ஆகியவற்றின் ஒரு பகுதியே என்றும் துஷார் வாதிட்டார். இது நீதிமன்றத்தின் நீதித்துறை மறு ஆய்வு வரம்புக்குள் வராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோயில்களின் இந்தச் சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவை இந்திய அரசியலமைப்பின் 25 மற்றும் 26-வது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன எனவும் விளக்கினார்.

இது குறித்து சொலிசிட்டர்ஜெனரல்துஷார்மேத்தா தன் வாதத்தில் பேசுகையில், பண்டைய காலங்களிலிருந்தேபெண்களைப்போற்றிவணங்கும் கொள்கையைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருவது இந்து மதமே ஆகும்.

இந்து மதம் பெண்களை ஆண்களுக்குச் சமமாக அங்கீகரித்தது மட்டுமல்லாமல், ஆண்களை விட மிக உயர்ந்த அந்தஸ்தையும் அவர்களுக்கு வழங்கியுள்ளது. உலகிலேயே பெண் தெய்வங்கள் இந்தியாவில்தான் அதிகமாக வழிபடப்படுகின்றனர்.

ஆண்களே அந்தப் புனிதமான 'பெண் தெய்வங்களின்' பாதங்களைத் தொட்டு வணங்கி பக்தர்களாகத்திகழும்ஒரேமதம்இந்துமதம்மட்டுமே என்று உறுதியாகக் கூறலாம்.பாலின அடிப்படையில் ஆலயத்துக்குள் நுழைவதை அனுமதிப்பது என்பது 'பாலினப்பாகுபாடு' சார்ந்தவிவகாரம்அல்ல.மாறாக, அது மதச்சடங்குகள், நம்பிக்கை மற்றும் விஸ்வாசம் சார்ந்த விவகாரமே. எனவே, அது நீதிமன்றத்தின் நீதித்துறை மறு ஆய்வு வரம்புக்கு அப்பாற்பட்டது என்று நிரூபிக்கும்பல உதாரணங்கள் உள்ளன எனத் தெரிவித்தார்.

இதற்கு உதாரணங்களாக உச்ச நீதிமன்றத்தில் துஷார் மேத்தா குறிப்பிட்ட பட்டியல் விவரம்:

ஆத்துக்கால் ஆலயம்: கேரளாவில் அமைந்துள்ள ஆத்துக்கால் பகவதி ஆலயம், பெண்களை முதன்மையாகக்கொண்டு வழிபாடுகள் நடைபெறும் ஒரு தலமாகும். சுமார் 30 லட்சம் பெண்கள் கலந்துகொள்ளும்பொங்கல்திருவிழாவைச்சிறப்பாக நடத்தியதற்காக, இந்த ஆலயம் கின்னஸ் சாதனைப் படைத்துள்ளது. இந்தத் திருவிழாவின்போது பெண்கள் மிகப்பெரிய அளவில்ஒரேஇடத்தில்கூடும் இந்த ஆலயத்துக்குள் ஆண்கள் நுழைவதற்கு அனுமதி இல்லை. சக்குலத்துக்காவு கோயில்: கேரளாவில்அமைந்துள்ளமற்றொருபகவதிஅம்மன் கோயிலான சக்குலத்துக்காவு கோயிலில், நாரி பூஜை எனப்படும் வருடாந்திரச் சடங்கு நடத்தப்படுகிறது. 10 நாட்கள் விரதமிருந்த பெண் பக்தர்களின் பாதங்களை ஆண் பூசாரிகள் கழுவி வழிபடுகின்றனர். இந்த நாரி பூஜை நேரத்தில், பெண்கள் மட்டுமே கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## பந்தலூர் டியூஸ் மேல்நிலைப்பள்ளியில் தேசிய பசுமைப் படை சார்பில்

# மூலிகைகளின் முக்கியத்துவம் பாதுகாக்க மாணவர்களுக்கு அழைப்பு



பந்தலூர் டியூஸ் மேல்நிலைப்பள்ளியில், தேசிய பசுமைப் படை சார்பில் "பல்லுயிர் சூழலில் மூலிகைச் செடிகளின் முக்கியத்துவம்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கியபள்ளி முதல்வர் சுதிந்திரநாத் பேசும்போது

தற்போது வேகமாக அழிந்து வரும் தாவர இனங்களில் உயிர் காக்கும் மூலிகைகள் மிகவும் அரிதாகி வருகின்றன. ஓரினச்சாகுபடி,அதிகப்படியான களைக்கொல்லி பயன்பாடு மற்றும் மக்களிடையே நிலவும் விழிப்புணர்வு குறைபாடு காரணமாக, வருங்காலத்தில் மருந்துக்குக் கூட மூலிகைகள் கிடைக்காத சூழல் உருவாகி வருவது வருத்தத்திற்குரியது. மாணவர்கள் ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கையோடு இணைந்து வாழ்வதை ஒரு இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்." கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிர மணியம் பேசுகையில், மாணவர்கள் விடுமுறை நாட்களைப் பயனுள்ளதாக மாற்றிட மாணவர்கள் தங்கள் வீடுகளிலேயே இயற்கை முறையில் மூலிகைத் தோட்டம், பூந்தோட்டம் மற்றும் காய்கறித் தோட்டங்களை அமைத்து இயற்கை பாதுகாப்பு பணிகளுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். மாவட்ட தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் வே.சிவதாஸ் பேசுகையில் உலக அளவில் மழைக்காடுகள்நிறைந்த கூடலூர் பகுதி, மூலிகைகளின் மிகப்பெரிய களஞ்சியமாக உள்ளது. இங்குக் காணப்படும் தனித்துவமான காலநிலை மற்றும் மண் வளமே இதற்குக் காரணமாகும். பழங்குடியின மக்களின் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படும் பல மூலிகைகள் இன்று அழிவின் விளிம்பில் உள்ளன. வனத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் வணிகப் பயன்பாட்டிற்கான மூலிகைக் காடுகளை உருவாக்குவது அவசியமாகும். படித்த இளைஞர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மூலிகைகளைக் கொண்டு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம் காடுகளைப் பாதுகாப்பதோடு மனித-விலங்குமோதல்களையும் குறைத்துச் சமநிலையைப் பேண முடியும். எதிர்காலத்தில் உலகளாவிய மூலிகை பயன்பாட்டிற்கு கூடலூர் ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் விக்னேஸ்வரன், பிரவீன் தாஸ், மகேஸ்வரன், பாக்கியம், சந்திரிகா மகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுகவிற்கும் பிற கட்சிகளுக்கு போடும் வாக்கு அது பாஜகவுக்கு செல்லும் வாக்கு பிரச்சாரத்தில் கீதாஜீவன் குற்றச்சாட்டு



தூத்துக்குடியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் கீதாஜீவன் மீனவர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய மேட்டுப்பட்டி மற்றும் திரேஸ்புரம் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் கூறுகையில்: இந்த தேர்தல் முக்கியமான தேர்தல் தமிழ்நாடு அணிக்கும் டெல்லி அணிக்கும் இடையேயான தேர்தல் பாசிச பாரதிய ஜனதா எப்படியாவது இது தமிழ்நாட்டில் காலூன்றி விட வேண்டும் தமிழ்நாட்டை தன்னிச்சையாக செயல்பட விடக்கூடாது அத்தனை உரிமைகளையும் அத்தனை கண்ட்ரோலையும் தனது கையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அடிமை அதிமுகவுடன் சேர்ந்து இந்த தேர்தலை சந்திக்கிறது. அதிமுக முகமூடியை வைத்துக்கொண்டு பின்னால் வருவது பாசிச பாஜக எனவே இந்த முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும் நம்முடைய எதிர்கால சந்ததியினரை தமிழகத்தை காப்பாற்றிட வேண்டுமானால் நம்முடைய மண் மொழி ஆகியவற்றைக் காப்பாற்றிட வேண்டுமானால் இந்த முறை இந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்றே ஆக வேண்டும்.

அதிமுக பிற கட்சிகளுக்கு போடும் வாக்கு அது பாஜகவுக்கு செல்லும் வாக்கு நமது கூட்டணி கட்சியினர் உடைய வாக்குகளை சிதறடிக்க தான் பலர் இறக்கப்பட்டுள்ளனர், கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகம் மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழகம் தான் அகில இந்திய அளவில் பலதுறைகளில் முதன்மை மாநிலம் வழங்குவது தமிழ்நாடு ஆகவே எப்படி சி ஏ ஏ கொண்டு வந்தாங்களோ வக்பு வாரிய சட்டம் கொண்டு வந்தார்களோ அதே போன்று கிறிஸ்தவ தொண்ட நிறுவனங்களை கொடுக்கக்கூடிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது பாசிச பாஜக மாணவர்களுடைய கடனை தள்ளுபடி செய்யவில்லை கோடீஸ்வரர்களுடைய கடனை தள்ளுபடி செய்துள்ளது மத்திய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற வார்த்தை கூட வரவில்லை அந்த அளவு புறக்கணிக்கிறார்கள் மீண்டும் தமிழக முதல்வர் தலைமையில் ஒரு நல்லாட்சி அமைய வேண்டும் என பேசினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளருமான கீதாஜீவன் 7, 8, ஆகிய வார்டு பகுதியில் பிரச்சாரத்திற்கு மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி, மண்டலத்தலைவர் நிர்மல்ராஜ், வட்டச்செயலாளர்கள் தினகரன், ரவிசந்திரன், கவுன்சிலர்கள் பவாணி, ஆறுமுகம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைச்செயலாளர் ராஜ்மோகன்செல்வின், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் அன்பழகன், மண்டலத்தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாநில பேச்சாளர் சரத்பாலா, மாவட்ட அணி நிர்வாகிகள் அபிராமிநாதன், அந்தோணி ஸ்டாலின், நிக்கோலாஸ்மணி, மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜேக்கப், வினோத், இசக்கிமுத்து, குமார், பால்ராஜ், வேல்பாண்டி, காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், மாவட்ட காங்கிரஸ் தலைவர் சகாயராஜ், முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், காங்கிரஸ் நிர்வாகிகள் கோபால், மைதீன், ஐசன்சில்வா, நிர்மல்கிறிஸ்டோபர், எஸ்டிபிஐ மாவட்ட செயலாளர் மைதீன்கனி, மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ஜவஹர், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், மனித நேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்டதலைவர் மீராசா, விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியார், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகரசெயலாளர் முத்து, ஒன்றிய செயலாளர் சங்கரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மதிமுக நகர செயலாளர் முருகபூபதி, தமிழர் தேசம் கட்சி மாவட்ட செயலாளர் இசக்கி முத்து, மூக்குலத்தோர் புலிப்படை மாவட்ட செயலாளர் மணி, சமத்துவ மக்கள் கழக மகளிர் அணி செயலாளர் குருவம்மாள், திமுக பகுதி அணி அமைப்பாளர்கள் மகேஸ்வரி, காசிராஜன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், புஷ்பராஜ், மார்ஷல், கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் ராஜசேகர், பட்டாணிதுரை, ஜான்சன், செல்வகணேசன், சக்கரவர்த்தி, முருகன், அக்பர், திமுக நிர்வாகிகள் இசக்கிமுத்து, சக்கரைசாமி, அகல்டா, பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், ர்தம்மாள்புரம் ஊர் நலக்கமிட்டி தலைவர் ஜான்சன், செயலாளர் ராஜா, பொருளாளர் தினகரன், மற்றும் மணி அல்பட் உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் உள்ள அதிமுக அலுவலகத்தில் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பாவை குருசாமி யாதவ் அறக்கட்டளை தலைவர் குரு வசந்த் நேரில் சந்தித்து அதிமுகவுக்கு ஆதரவு கொடுத்தார். அப்போது சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர், மாவட்ட பொருளாளர் சண்முகையா, மாவட்ட விவசாய அணி செயலாளர் பரம குருநாதன், யாதவ சங்க நிர்வாகிகள் ராயல் மணிகண்டன், மோகன் யாதவ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# தென்காசி மாவட்டத்தில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு வரவேற்பு



தென்காசி மாவட்டத்தில் அ.இ அதிமுக தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் தென்காசி மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் தொகுதியில் அக்கட்சியின் மாவட்டத்தலைவர் ஆனந்தன் ஐயாச் சாமி போட்டியிடுகிறார் தென்காசி மாவட்டத்தில் உள்ள தென்காசி ஆலங்குளம் கடையநல்லூர் வாசுதேவநல்லூர் சங்கரன்கோவில் ஐந்து தொகுதிகளில் வாசுதேவநல்லூர் தனி தொகுதியில் ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாவட்டதலைவர் போட்டியிடுவதை தொடர்ந்து மாநில தலைவர் திரு நயினார் நரேந்திரன் அவர்கள் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு வருகை புரிந்தார் தொகுதியில் வேட்பாளர் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் கள நிலவரம் கேட்டறிந்து பின்னர் அதை அருகாமையில் உள்ள கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை புரிந்தார் தொகுதியின் எல்லையான கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சொக்கம்பட்டிக்கு வருகை புரிந்த பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் அவர்களை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான கிருஷ்ண முரளி (எ)குட்டியப்பா அவர்களின் தலைமையில் சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளரும் தென்காசி மாவட்ட வர்த்தக அணி தலைவருமான S. M. மைதீன் சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் பொய்கை சோ. மாரியப்பன், நகரக்கழக செயலாளர், M. K. முருகன், தளவாய் சுந்தரம், கருப்பையா தாஸ், ராஜேந்திர பிரசாத் ஆகியோர் உடன் இருந்தனர். பின்னர் கட்சி நிர்வாகிகளிடம் பேசிய மாநில தலைவர் மாவட்டத்தில் அனைத்து கூட்டணி கட்சிகளையும் ஒருங்கிணைத்து தேர்தல் பணியாற்ற அனைவரையும் கேட்டுக் கொண்டார்

# தென்காசியில் சமரசநாள் விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம்; நீதிபதிகள் வழக்கறிஞர்கள் பங்கேற்பு



தென்காசி மாவட்ட சமரச தீர்வுமையத்தின் சார்பில் சமரச நாள் விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட சமரச தீர்வு மையத்தின் தென்காசி மாவட்ட சமரச நாளை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி. ராஜவேல் தலைமையில், கூடுதல் மாவட்ட நீதிபதி எஸ். மனோஜ்குமார், முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி .ஜெ.கிறிஸ்டல் பபிதா, முதன்மை சார்பு நீதிபதி.ஏ.பிஸ்மிதா, கூடுதல் சார்பு நீதிபதியும் இலவச சட்ட உதவி செயலாளருமான எஸ்.

முருகவேல், முதன்மை மாவட்ட நீதிபதி ஜெ. ராஜேஸ்குமார், நீதித்துறை நடுவர் நீதிபதி எஸ்.முத்துலெட்சுமி ஆகியோர்க முன்னிலையில் நடைபெற்றது . இந்த சமரச விழிப்புணர்வு பேரணியை தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேல் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த விழிப்புணர்வு பேரணியில் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள் மற்றும் தங்கப்பழம் சட்டக்கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலிருந்து புறப்பட்ட விழிப்புணர்வு பேரணி தென்காசி திருநெல்வேலி சாலையில் சென்று அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அருகே சென்று திரும்பி நீதிமன்றத்திற்கு வந்து நிறைவு பெற்றது..

இந்த பேரணியில் பொதுமக்களுக்கு சமரசத் தீர்வு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து வழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. அதன் பின்னர் சமரச விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம் நமது ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள கருத்தரங்கு கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த சமரச விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்ச்சியில் தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி..ராஜவேல் தலைமையுரையாற்றினார்கள் தென்காசி அட்வகேட் அசோசியேசன் தலைவர் ஆர்..மாடக்கண் மற்றும் வழக்கறிஞர் எம். தாஹிராபேகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தங்கப்பழம் சட்டக்கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சமரத் தீர்வு குறித்து உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியினை வழக்கறிஞர் முத்துக்குமார் தொகுத்து வழங்கினார்.

கருத்தரங்க நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் எம்.மாரியப்பன், மாடசாமி பாண்டியன், ஏ.ராஜா, வேல்பாண்டி, பன்னீர்செல்வம், சொக்கலிங்கம், முகம்மது சலீம், மஞ்சுகிருஷ்ணா, முத்துலெட்சுமி, மரகதம், மற்றும் ஏராளமான வழக்கறிஞர்கள், மற்றும் நீதிமன்ற பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

இறுதியில் அனைவருக்கும் தென்காசி கூடுதல் சார்பு நீதிபதியும் இலவச சட்ட உதவி செயலாளருமான எஸ்.. முருகவேல் நன்றியுரை யாற்றினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.04.2026) ஈரோடு மாவட்டம், கொங்கு பொறியியல் கல்லூரியில் மாவட்ட விளையாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் கபாடி விளையாட்டுப்போட்டியினை துவக்கி வைத்தார்.


# சென்னையில் 419 பேர் போட்டி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு

சென்னை: தமிழக சட்டமன்ற தேர்தலில் சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் மொத்தம் 419 பேர் போட்டியிடுகின்றனர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல், மார்ச் 30-ஆம் தேதி ஏப்ரல் 06-ஆம் தேதி வரை நடைபெற்றது. வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நிறைவடைந்தது.

வேட்பு மனுவை இன்று(ஏப்.9) மாலை 3.00 மணிக்குள் திரும்பபெறலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இறுதி வேட்பாளர்கள் பட்டியலும் இன்றே வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

தமிழகம் முழுவதும் இருந்து 7,599 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பிரசீலனைக்குப் பிறகு இரவு 11.59 மணி நிலவரப்படி, 4,618 மனுக்கள் ஏற்கப்பட்டு, 2460 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 521 வேட்புமனுக்கள் திரும்ப பெறப்பட்டிருந்தன.




அதைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் வெளியாகியுள்ளது. சென்னையில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளில் இருந்து 616 வேட்புமனுக்கள் பெறப்பட்டிருந்தன. அவற்றில், 173 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 24 வேட்புமனுக்கள் திரும்ப பெறப்பட்டன. இதையடுத்து சென்னையில் 419 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 47 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக சைதாப்பேட்டை தொகுதியில் 15 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் பட்டியலை வைத்து, தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர்பட்டியலை தமிழக தேர்தல் ஆணையம் வெளியிடும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு ஏற்கனவே சின்னம் உள்ளது. பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுயேட்சையாக போட்டியிடுபவர்களுக்க் சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும்.



ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் கருங்கல்பாளையம் பகுதி 39, 40 வது வார்டில்★10042026 நேற்று காலை கை சின்னத்தில் வாக்கு சேகரித்தார், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, வார்டு கழகம், சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொண்டு வேட்பாளர் அவர்களுக்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.



கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சியின் பொதுச்செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களை, தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் எல்.கே.எம்.சுரேஷ், மாநிலச் செயலாளர் இரா.வேலுச்சாமி மற்றும் மாநிலப் பொருளாளர் சித்தோடு கே பாலசுப்பிரமணியம் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.இந்த சந்திப்பின் போது தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள், ஈரோடு, பல்லடம் மற்றும் திருச்செங்கோடு விசைத்தறி சங்க நிர்வாகிகள் உடனிருந்து தங்களது வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இச்சந்திப்பு திருச்செங்கோட்டில் மரியாதை நிமித்தமாக நடைபெற்றது.

## ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவையினர் மத்திய அமைச்சர் எல்.முருகனுடன் சந்திப்பு



ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவை நிர்வாகிகள் பால்வளம் மற்றும் தகவல் தொலைத்தொடர்பு துறையின் மத்திய இணை அமைச்சர் எல். முருகனை அவர்களை ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்மா பேரவையின் மாவட்ட செயலாளர் ஆர்.மூர்த்தி தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து விஸ்வகர்மா சமுதாய மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தினர். மத்திய அரசின் நலத்திட்டங்களை ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்மா பேரவை மக்களுக்கு கிடைக்கவும் வலியுறுத்தினர். இந்த நிகழ்வில் மாவட்டத் துணைத் தலைவர் இளங்கோவன் திருமூர்த்தி மற்றும் நிர்வாகி முருகேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (09.04.2026) அன்று வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

## 'I'll be upset if you pay': Iran takes jibe at Hormuz blockade amid $2 million fee

*As a fragile, two-week ceasefire holds between the United States and Iran, diplomacy is not just unfolding at negotiating tables – it is also playing out online, with Iranian missions across the globe responding to Washington's pressure with humour.*

*Since the outbreak of the conflict, Iranian embassies across the world have been posting sharp replies to repeated warnings and remarks from Donald Trump.*



*In one of the latest posts, the Iranian embassy in Tunis turned to cultural nuance to make a point about the Strait of Hormuz, a key global oil route now at the centre of the standoff. Track US-Iran war live updates.*

*"To all sailors: If you hear these phrases in the Strait of Hormuz, it's called ta'arof in Iranian culture (Iranian politeness) – don't take it literally," the embassy said.*

*It followed up with a list of exaggerated courtesies: "Be our guest. You don't have to pay every time. I'll be upset if you pay. Let us pay for once! What money. If you pay, don't come back!" The post was later deleted.*





மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்ற கழகத்தின் வேட்பாளர் சு. முத்துசாமி அவர்களை ஆதரித்து வெள்ளோடு ரவுண்டானாவில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



ஈரோடு கிழக்கு அதிமுக வேட்பாளர் பெரியார்நகர் இரா.மனோகரன் அவர்களை, தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் எல்.கே.எம்.சுரேஷ் மற்றும் மாநிலப் பொருளாளர் சித்தோடு கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர்மரியாதைநிமித்தமாகநேரில்சந்தித்துவாழ்த்துக்களைதெரிவித்தனர்.இச்சந்திப்பின்போது,ஈரோடுவிசைத்தறி உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் ராசு (எ) பழனிசாமி, பொருளாளர் செல்லாராம் மணி, துணைத் தலைவர் ஜெகநாதன் மற்றும்சங்கநிர்வாகிகள்உடனிருந்தனர்.வேட்பாளருக்குத்தங்களதுவாழ்த்துகளைத்தெரிவித்தநிர்வாகிகள்,விசைத்தறித் தொழில் குறித்து சுமுகமாக உரையாடினர். இந்த சந்திப்பு ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பாக அமைந்தது.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கொல்லம்பாளையம் பகுதி வார்டு 55 ல் உதயசூரியன் சின்னத்திற்கு கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

## Army chief explains how timing for Operation Sindoor strikes was chosen, mentions Namaz factor



*India's Operation Sindoor was planned and executed not only with precision but also with carefully considered timing, Army Chief Upendra Dwivedi said, revealing that the armed forces deliberately avoided striking terror hubs during prayer hours.*

*"When we were preparing to strike these targets, the timing could have been 2 o'clock, 4 o'clock – at any hour," he said, explaining the operational flexibility. However, he added that the forces deliberately held back at certain times.*

*"We ensured that we would not act at a time when people on the other side might be offering Namaz at the terrorist camps," he said.*

*Dwivedi summed up the approach by saying: "sabka malik ek hai (There is one God for all). That is why we chose a time when we knew such prayers were not taking place." The army chief was referring to the military operation, launched in May last year after the April 22 terror attack in Jammu and Kashmir's Pahalgam left 26 people dead, mostly tourists. The attack saw Pakistan-backed terrorists storm a popular tourist valley, triggering a swift Indian military response targeting terror launchpads across the Pakistan border and Pakistan-occupied-Kashmir (PoK) regions. Pakistan responded with a sharp escalation in the days following Operation Sindoor, launching drones and carrying out shelling. In a span of about a week, Islamabad sent swarms of drones towards India, most of which were successfully intercepted mid-air, though some caused damage in areas along the border.*

*As losses mounted for Islamabad, Pakistan's Director General of Military Operations (DGMO) reached out to his Indian counterpart and both sides agreed to halt all military actions – on land, in the air, and at sea – effectively on May 10, 2025.*

*On Thursday, Dwivedi further described the operation as a turning point in India's military evolution.*

*He was speaking at the 'RanSamvad' forum in Bengaluru, when he said, "Operation Sindoor was India's most powerful tool of progression towards domain jointness. But we need to achieve domain integration and fusion," reported news agency PTI.*

*The Army chief also pointed to the growing importance of non-kinetic operations, adding that a significant portion of the effort went beyond the battlefield.*

*"15 per cent of our effort was on managing the disinformation campaign," he said, highlighting the parallel information war that accompanied the military action.*

*Post-operation, the Army has moved to strengthen its capabilities in this space, including setting up an information warfare organisation and a psychological defence division, he added.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.